DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 105 /2022
**Depositions of PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ் கண்ணன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th Day of July 2025

**11.07.2025**
(எதிரி ஆஜர். )
**முதல் விசாரணை**

நான் திருத்தங்கல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவம் நடக்கும் சமயத்தில் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தேன். கடந்த 20-10-2021 ஆம் தேதியன்று 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் காசிராஜன், முதல் நிலை காவலர் கணேஷ் கண்ணன் ஆகியோருடன் நான் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, கண்ணா நகர் நாராயண ரெஸ்டாரண்ட் அருகே லாட்டரி சீட்டுக்கள் விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று பார்த்தபோது, எங்களைப் பார்த்ததும் ஒரு நபர் ஓடினார். அவரை நிறுத்தி விசாரிக்கும்போது அவர் பெயர் குருமூர்த்தி, த/பெ. நாராயணன் என்றும் சொன்னார். அந்த நபர் ஆஜர் எதிரிதான். எதிரி தடைசெய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகள் விற்பதாக உதவி ஆய்வாளர் விசாரணையின்போது சொன்னார். எதிரியை பரிசோதித்தபோது அவரிடம் M என்ற எழுத்துடன் 6 துண்டு சீட்டுக்கள் இருந்தது. அதில் எண்களும் எழுதப்பட்டிருந்தது. உதவி ஆய்வாளர் அந்த இடத்தில்

அத்தாட்சி தயார் செய்து எதிரியிடமிருந்து M என்று எழுதப்பட்ட துண்டு சீட்டுக்களை பொதுமக்கள் சாட்சியாக இருக்க முன்வராததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் இருந்த முதல்நிலை காவலர் கணேஷ் கண்ணன் என்பவரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தார். சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்ட **அத்தாட்சி அ.சா.ஆ.–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் M என்று எழுதப்பட்ட துண்டு சீட்டுக்கள்தான் (6 எண்ணிக்கை) எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டவை ஆகும்.

(3) பின்னர் எதிரியை கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து.எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று, முதல் நிலை காவலர் கணேஷ் கண்ணன், மற்றும் உதவி ஆய்வாளர் ஆகிய மூவரும்தான் ரோந்து பணிக்கு பல இடங்களுக்கு சென்றோம் என்றால் சரிதான். நாரணாபுரம் புதூர், ராஜீவ் காந்தி நகர், அம்மன் நகர் , 56 வீட்டு காலனி ஆகியன சிவகாசி கிழக்கு காவல் நிலைய எல்கைக்குட்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு நாரணாபுரம் புதூரிலிருந்து சிவகாசிக்கு வரும் பாதை வழியாகவும், சிவகாசி

ரத்தினவிலாஸ் பேருந்து நிறுத்தப்பாதை வழியாகவும் வரலாம் என்றால் சரிதான். நாங்கள் எந்த வழியாக வந்தோம் என்றால் ரத்தினவிலாஸ் பேருந்து நிறுத்தப்பாதை வழியாக வந்தோம். நாங்கள் மூவரும் தனித்தனியாக இருசக்கர வாகனங்களில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தோம். ரோந்து பணியின்போது எந்தெந்த இடங்களை பார்வையிட்டோம் என்றால் ரத்தினவிலாஸ் பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் கூடுவார்கள் என்றால் அந்த இடத்தினை பார்வையிட்டோம். மற்ற இடங்கள் ஞாபகம் இல்லை. அன்றைய தினம் நாரணாபுரம் நான்குமுக்கினை பார்வையிட்டோமா என்றால் பார்வையிட்டோம்.

(2) நாரணாபுரம் புதூர் சாலையில் நாராயணன் ரெஸ்டாரென்ட் சாலையில் இடது புறமாக மேற்கு பார்த்து உள்ளது. ரத்தினவிலாஸ் பேருந்து நிறுத்தத்திலிருந்து நாரணாபுரம் புதூர் செல்லும் சாலை கிழமேல் சாலை என்றால் சரிதான். ரோந்து பணி சென்றது குறித்து, காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பொதுநாட் குறிப்பில் எழுதிவிட்டு சென்றோம் என்றால் சரிதான். எதிரியை நாராயண ரெஸ்டாரண்டுக்கு வெளியில் பார்த்தோமா அல்லது உள்ளே வைத்து பார்த்தோமா என்றால் வெளியில் வைத்து பார்த்தோம். எதிரி எவ்வளவு தூரம் ஓட முயன்றார் என்றால் சுமார் 10 அடி தூரம் ஓட முயன்றார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை பொதுமக்கள் அதிகமாக செல்லக்கூடிய இடம் என்றால் சரிதான். மதிய வேளை என்பதால் நாராயண ரெஸ்டாராண்டிற்கு பொதுமக்கள் அதிகமாக உணவருந்த வருவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு சாப்பிட வந்த பொதுமக்களுக்கும் சாலையில் சென்றவர்களுக்கும் சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான்.

(3) அத்தாட்சியில் சாட்சியாக இருக்க அழைத்ததாக கூறப்படும்

தனிநபர்களின் பெயர் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திலிருந்து எந்த பாதை வழியாக சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் ரத்தின விலாஸ் பேருந்து நிறுத்த பாதை வழியாகத்தான் வந்தோம். எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் மதியம் 3 மணிக்கு வந்தோம். காவல் நிலையத்திற்கு வந்த பின்னர்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சி எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் மதியம் சுமார் 2.30 மணி இருக்கும். நான் சொன்னது போல் சொன்ன நாள், நேரம்,இடத்திற்கு ரோந்து பணிக்காக செல்லவில்லை என்றாலும் சொன்ன நாள், நேரம் இடத்தில் வைத்து எதிரியை பார்க்கவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்தவிதமான வழக்கு சொத்துக்களும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. M என்று எழுதப்பட்ட துண்டு சீட்டில் உள்ள நம்பர் மற்றும் M என்ற எழுத்தினை யார் எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் யார் எழுதினார்கள் என்று தெரியாது. எதிரியிடமிருந்து கைப்பற்றும்போது அதில் ஏற்கனவே எழுதப்பட்டிருந்தது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் M என்று எழுதப்பட்ட துண்டுச் சீட்டில் மகராஷ்ட்ரா என்ற வார்த்தை இல்லை என்றால் சரிதான்.

(4) சம்பவ இடத்தில் பொது மக்களை சாட்சியாக இருக்க அழைத்ததாக கூறுவது பொய் என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.